**ஜூலை – 19**

# தேசியச் செய்திகள்

## சூரிய ஆற்றலில் இயங்கும் DEMU

- சூரிய ஒளி இல்லாத பொழுதும் போதுமான ஆற்றலை உறுதிப்படுத்தும் மின்கல வங்கி வசதியுடன் கூடிய சூரிய ஆற்றலில் இயங்கும் முதல் உள்ளூர் ரயிலினை இந்தியன் ரயில்வே தொடங்கி வைத்துள்ளது.
- ஒட்டு மொத்த ரயில் பெட்டிகளுக்குத் தேவையான ஆற்றலும் DEMU (Diesel Electric Multiple Unit) ரயில் பெட்டிகளின் மேற்புறத்தில் பொருத்தப்பட்டுள்ள சூரியத் தகடுகளினால் உற்பத்தி செய்யப்படும் ஆற்றலால் பூர்த்தி செய்யப்படும்.



- 1600 குதிரைத்திறன் கொண்ட இந்த ரயில் சென்னையிலுள்ள ஒருங்கிணைந்த ரயில் பெட்டித் தொழிற்சாலையில் (Integrated Coach Factory - ICF) உருவாக்கப்பட்டது. இதன் சூரிய ஆற்றல் அமைப்பு மற்றும் தகடுகள், மாற்று எரிபொருள்களுக்கான இந்திய ரயில்வே அமைப்பினால் (Indian Railways Organization of Alternative Fuel – IROAF) உருவாக்கப்பட்டு பொருத்தப்பட்டது.

### *DEMU*

- DEMU, தனிப்பட்ட என்ஜின்கள் இல்லாத எந்திரத்தினால் இயங்கும் பல அலகுகளைக் கொண்ட ரயில் ஆகும்.
- பொதுவாக DEMU ரயில்கள், மின்விசிறி, மின்விளக்குகள், டீசலால் இயங்கும் மின் ஆக்கி போன்ற பயணிகளின் நல்வசதி அமைப்பிற்கு மின்ஆற்றலை வழங்குகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## உலக சுங்கவரி அமைப்பு – ஆசிய பசிபிக் பகுதிகளின் தலைமை (World Customs organization – WCO)

- இந்தியா ஜூன் 2020 வரை இரண்டு ஆண்டு காலத்திற்கு ஆசிய பசிபிக் பகுதிகளின் உலக சுங்கவரி அமைப்பின் துணைத் தலைவராகியுள்ளது. (பிராந்தியத் தலைமை)
- இந்த அமைப்பு உறுப்பினர் தகுதியினை ஆறு பகுதிகளில் பகிர்ந்தளித்துள்ளது. இந்த ஒவ்வொரு பகுதியும் தேர்ந்தெடுக்கப்பட்ட துணைத் தலைவர்களால் WCO-ல் பிரதிநிதித்துவப்படுத்தப்படும்.

### *WCO*

- WCO பெல்ஜியமில் உள்ள பிரசல்ஸை தலைமையிடமாகக் கொண்ட அரசுகளுக்கிடையேயான அமைப்பு ஆகும்.
- சர்வதேச ஒத்திசைவு அமைப்பு (International Harmonized System - HS), பொருள்களின் பெயரிடுதல், சுங்க மதிப்பீடு மற்றும் தோற்ற விதிகள் மீதான உலக வர்த்தக அமைப்பின் (World Trade Organization – WTO) ஒப்பந்தங்களின் தொழில்நுட்ப அம்சங்களை நிர்வாகம் செய்தல் ஆகியவற்றை WCO நிர்வகிக்கிறது.
- உலக வர்த்தகத்தில் தோராயமாக 98 சதவிகிதத்தில் உலகெங்கிலும் செயல்படும் 182 நாடுகளின் சுங்க நிர்வாகத்தினை WCO பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

## அமைதித் திட்டம்

- அடுத்த மாதம் ரஷ்யாவில் நடைபெற உள்ள பயங்கரவாதத்திற்கு எதிரான மெகா படைப்பயிற்சியில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகியன பங்கேற்க உள்ளன.
- இது சாங்காய் கூட்டுறவு அமைப்பினால் (Shanghai Co-Operation Organization – SCO) ஏற்பாடு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.
- பயங்கரவாதம் மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளை கையாளுவதில் உறுப்பினர் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பினை விரிவுப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- இரஜபுத்திர படைவகுப்பின் 5வது படைப்பிரிவின் 200 வீரர்களையும் இந்திய வான்வெளிப் படையின் சிறிய நிறைவான எண்ணிக்கையிலான படையினையும் "அமைதித் திட்டம் – 2018" என்று அழைக்கப்படும் படைப்பயிற்சிக்கு இந்தியா தேர்ந்தெடுத்துள்ளது.
- ரஷ்யாவில் உள்ள தெற்கு உரால் மலைப்பகுதி சரிவில் உள்ள செபார்குல்ஷ்கி (துருக்கி மொழியில் இதன் அர்த்தம் – "அழகான, வண்ணமயமான ஏரி") பயிற்சி மைதானத்தில் இப்பயிற்சி நடைபெறும்.
- SCO-ன் மற்ற உறுப்பினர் நாடுகளான ரஷ்யா, கிர்கிஸ்தான், உஷ்பெகிஸ்தான், தஜிகிஸ்தான், கஜகஸ்தான் ஆகியவற்றுடன் சேர்ந்து இந்தியா, பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகியவற்றின் இராணுவங்கள் நட்பு ரீதியிலான இராணுவப் பயிற்சியில் ஈடுபடுவது இதுவே முதல் முறையாக இருக்கும்.

### *இந்தியா – சீனா – பாகிஸ்தான்*

- இந்தியா மற்றும் பாகிஸ்தான் படைகள் UN-ன் அமைதி காக்கும் படைகளின் கொடியின் கீழ் குறிப்பாக காங்கோவில் பல வருடங்களாக ஒன்றிணைந்து செயலாற்றி வருகின்றன.
- இந்திய மற்றும் சீன இராணுவங்கள் "Hand in Hand" என்று பெயரிடப்பட்ட இருதரப்புப்

பயிற்சித் தொடர்களில் 2007லிருந்து ஈடுபடுகின்றன. "Hand in Hand" பயிற்சி பயங்கரவாதத்திற்கு எதிரான போர்ப் பயிற்சியும் ஆகும்.

## UN மனித உரிமைகள் சபை

- ❖ UN (United Nations – UN) மனித உரிமைகள் சபைக்கு அமெரிக்காவிற்கு பதிலாக ஐஸ்லாந்தினை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (United Nations General Assembly) தேர்ந்தெடுத்துள்ளது.
- ❖ இந்த தேர்தல், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையினை விட்டு விலகுவதாக அமெரிக்கா எடுத்த முடிவிற்குப் பிறகு நடந்தது.
- ❖ மனித உரிமைகள் சபைக்கு ஐஸ்லாந்து முதன் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- ❖ மேற்கத்திய நாடுகளின் குழுவினால் ஐஸ்லாந்து பரிந்துரைக்கப்பட்டது.
- ❖ 47 உறுப்பினர்களைக் கொண்ட மனித உரிமைகள் சபை உலகின் ஒவ்வொரு பகுதிக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான இடங்களை ஒதுக்குகிறது.
- ❖ ஐஸ்லாந்தின் பதவி வரையறைக் காலம் உடனடியாக தொடங்குகிறது. டிசம்பர் 31, 2019 வரை அது தனது பணியினை ஆற்றும்.

# மாநிலச் செய்திகள்

## சுலாபக் ஜல்

- ❖ உலகிலேயே பீகார் மாநிலம் மிக விரைவாக மலிவான குடிநீரை வழங்கவுள்ளது.
- ❖ முதன்முறையாக தண்ணீர் தொடர்பான திட்டமான சுலாபக் ஜல் பீகாரின் தர்பங்கா மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ இத்திட்டம் சுலாபக் இண்டர்நேஷனல் (Sulab International) என்னும் நிறுவனத்தால் தொடங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் நாட்டில் 'சுலாபக் சவ்ச்சல்யா' என்னும் கருத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ 'சுலாபக் ஜல்' என்பது அசுத்தமான குளம் மற்றும் நதிநீரை சுத்தமான குடிநீராக மாற்றும் திட்டமாகும்.
- ❖ இத்திட்டத்தின் மூலம், மக்கள் எளிதாக சுத்தமான குடிநீரை 50 பைசா/லிட்டர்க்குப் பெற முடியும்.

### *ஆர்சனிக்*

- ❖ நேபாள எல்லையை ஒட்டியுள்ள வடபீகாரின் பல மாவட்டங்களில் உள்ள நிலத்தடி நீர் ஆர்சனிக் மற்றும் மற்ற இரசாயனங்களால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.
- ❖ உலக சுகாதார நிறுவனத்தின் கூற்றின்படி (WHO-World Health Organization) ஆர்சனிக் என்பது பூமியின் மேல் ஒட்டில் இயற்கையாக இருக்கும் கூறாகும். இது பூமியின் எல்லா இடங்களிலும் பரவியுள்ளது. (வாயு, நீர் மற்றும் நிலம்) இது கனிம வடிவத்தில் அதிக நச்சுத் தன்மையை உடையது.
- ❖ அசுத்தமான குடிநீர், அந்தக் குடிநீரால் தயாரிக்கப்பட்ட உணவுகள் போன்றவற்றில் உள்ள கனிம ஆர்சனிக் நீண்ட காலமாக வெளிப்படும்போது தோல் சிதைவு அல்லது

புற்றுநோய் ஏற்படும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## சங்கீத கலாநிதி விருது – அருணா சாய்ராம்

- இசைச் சங்கத்தின் இந்த ஆண்டிற்கான சங்கீத கலாநிதி விருதுக்கு கர்நாடக இசைப் பாடகர் அருணா சாய்ராம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



- இவர் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 15 முதல் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 1 வரை நடைபெறும் 92 வது வருடாந்திர மாநாட்டிற்குத் தலைமை வகிப்பார். சதாஸ் நாளான 2019 ஆம் ஆண்டு ஜனவரி 1 அன்று இவருக்கு இந்த விருது அளிக்கப்பட இருக்கிறது.

### *மற்ற விருதுகள்*

- மிருதங்கவியலாளர் தஞ்சாவூர் ஆர்.ராமதாஸ், பாலகாட் டி.எஸ்.மணி அய்யரின் மாணவர் மற்றும் பாடகர் ஓமன் குட்டி ஆகியோர் சங்கீத கலா ஆச்சார்யா விருது பெறவுள்ளனர்.
- வீணைக் கலைஞர் கல்யாணி கணேசன் மற்றும் நாதஸ்வரக் கலைஞர் எஸ்.ஆர்.ஜி.ராஜன்னா ஆகியோருக்கு டி.டி.கே. விருதுகள் வழங்கப்படவிருக்கிறது.
- நுண்கலைகளுக்கான தமிழ்நாடு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் பிரமீளா குருமூர்த்தி இசையமைப்பாளருக்கான விருதைப் பெறவுள்ளார். நிருத்திய கலாநிதி விருதினை நடனக் கலைஞர் சாந்தா தனஞ்ஜெயன் பெறவுள்ளார். இந்த விருது அவருக்கு ஜனவரி 3ஆம் தேதி வழங்கப்பட இருக்கிறது.

# விளையாட்டுச் செய்திகள்

## நோவாக் ஜோக்கோவிக் - விம்பிள்டன்

- கெவின் ஆன்டர்சனைத் தோற்கடித்து நோவாக் ஜோக்கோவிக் தனது நான்காவது விம்பிள்டன் சாம்பியன்ஷிப்பினை வென்றுள்ளார்.
- இரண்டு ஆண்டுகளுக்கு மேலான காலகட்டத்திற்குப் பிறகு இது இவரின் முதல் கிராண்ட்ஸ்லாம் வெற்றியாகும்.



- இந்த வெற்றி ஜோக்கோவிக்கின் 13வது வெற்றியினை குறித்துக் காட்டுகிறது.
- கடந்த நூறு வருடங்களில் விம்பிள்டன் ஒற்றையர் பிரிவினை வென்றவர்களின் எண்ணிக்கையில் ஜோக்கோவிக்கிற்கு நிகரான அல்லது அதற்கும் மேலான 4 நபர்கள்,
    - ரோஜர் ஃபெடரர் (8 போட்டிகள்)
    - பீட் சாம்ப்ராஸ் (7)
    - ஜோர்ன் போர்க் (5)
    - ராடு லேவர் (4)
- அனைத்து விதங்களிலும் கிராண்ட்ஸ்லாம் ஆண்கள் ஒற்றையர் சாம்பியன்கள் பிரிவில் ஜோக்கோவிச்சை விட அதிக வெற்றி பெற்று பட்டியலில் இருக்கும் நபர்கள்
    - ஃபெடரர் (20 போட்டிகள்)
    - ரஃபேல் நடால் (கிராண்ட்ஸ்லாம் 17)
    - சாம்ப்ராஸ் (14)

## ஸ்பானிஷ் க்ராண்ட் பிரிக்ஸ்

- மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத், மாட்ரிடில் நடந்த ஸ்பானிஷ் க்ராண்ட் பிரிக்ஸில் தங்கம் வென்றுள்ளார்.




- இவர் பெண்களுக்கான 50 கிலோகிராம் ப்ரீஸ்டைல் பிரிவில் தங்கம் வென்றுள்ளார்.
- 23 வயதான இவர் கனடாவின் நடாசா ஃபாக்ஸினை இறுதிப் போட்டியில் 10-0 என்ற கணக்கில் வென்றுள்ளார்.
- இதற்கு முன்பாக, கோல்டுகோஸ்ட் காமன்வெல்த் போட்டிகளில் இவர் தங்கம் வென்றுள்ளார்.

# முக்கியத் தினங்கள்

## உலக இளைஞர்களின் திறன்கள் தினம் – ஜூலை 15

- இளைஞர்களின் திறன்கள் வளர்ச்சிக்கு முதலீடு செய்வதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் விதமாக உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 15 ஆம் நாள் உலக இளைஞர்களின் திறன்கள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.



- 2014 ஆம் ஆண்டு டிசம்பரில் ஐக்கிய நாடுகள் பொது அவையில் ஜூலை 15 ஐ உலக இளைஞர்களின் தினமாக அனுசரிக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## நெல்சன் மண்டேலா சர்வதேச தினம் – ஜூலை 18

- நெல்சன் மண்டேலாவின் 100 வது பிறந்த தினத்தைக் குறிக்கும் விதமாக நெல்சன்

மண்டேலா தினம் அனுசரிக்கப்படுகிறது (18 ஜூலை 1918).





- அமைதி மற்றும் சுதந்திரத்திற்கு முன்னாள் தென்னாப்பிரிக்க அதிபர் ஆற்றிய பங்கை அங்கீகரிப்பதற்காக ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஜூலை 18-ஐ 'நெல்சன் மண்டேலா சர்வதேச தினமாக' அறிவித்துள்ளது.

***நெல்சன் மண்டேலா பரிசு***

- நெல்சன் மண்டேலா பரிசு முதன்முதலாக 2015 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.
- இப்பரிசின் நோக்கமானது ஐக்கிய நாடுகளின் நோக்கங்கள் மற்றும் கொள்கைகளால் வழிநடத்தப்பட்டு மனித வர்க்கத்தின் சேவைக்காகப் பாடுபடுபவர்களின் சாதனைகளை கௌரவிப்பதாகும். சமரசப் பேச்சுவார்த்தை மரபு, அரசியல் நிலைமாற்றம் மற்றும் சமூகமாற்றம் ஆகியவற்றை கொண்ட நெல்சன் மண்டேலாவின் தனிச்சிறப்புமிக்க வாழ்க்கை மற்றும் மரபுக்கு மரியாதை செலுத்துவதும் இதன் நோக்கமாகும்.
- 2015 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தலைசிறந்த சாதனையாளர்கள் மற்றும் பங்களிப்பாளர்களுக்கு (1 ஆண் மற்றும் 1 பெண்) இப்பரிசு வழங்கப்படுகிறது.

***2015ஆம் ஆண்டு பரிசு பெற்றவர்கள்***


- டாக்டர் ஹெலினா நுடும், நமீபியா
- H.E. திரு.ஜோர்ஜ் பெர்னான்டோ பிரான்கோ சம்பாயோ, போர்ச்சுக்கல்



## *நெல்சன் மண்டேலா விதிகள்*

- ஐக்கிய நாடுகள் சபையானது நெல்சன் மண்டேலா சர்வதேச தினத்தின் நோக்கத்தை
    - சிறையில் மனிதாபிமானத்துடன் நடத்தப்படுவதை ஊக்குவித்தல்
    - சிறைக் கைதிகள் சமூகத்தின் ஒரு அங்கம் என்பதிற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்,
    - சிறைச்சாலை பணியாளர்களின் வேலையை குறிப்பிட்ட முக்கியத்துவம் வாய்ந்த சமூக சேவையாக மதிப்பிடுதல்.

  ஆகியவற்றிற்கு நீட்டித்து பயன்படுத்த முடிவு செய்துள்ளது.
- பொதுச் சபையின் தீர்மானமானது சிறைச்சாலையில் சிறைக் கைதிகளை நடத்துவதற்காக உருவாக்கப்பட்ட நிலையான குறைந்தபட்ச விதிகள் ஆகும். இவ்விதிகள் முன்னாள் தென்னாப்பிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவை கௌரவிக்கும் விதமாக 'நெல்சன் மண்டேலா விதிகள்' என்று ஒப்புதல் பெற்று அழைக்கப்படுகிறது.



# இதரச் செய்திகள்

## வாடிக்கையாளர் மனநிறைவு குறியீடு கணக்கெடுப்பு

- நாட்டிலுள்ள 49 விமான நிலையங்களில் ராய்ப்பூரின் சுவாமி விவேகானந்தா விமான நிலையம் வாடிக்கையாளர் மனநிறைவில் முதலிடத்தினைப் பெற்றுள்ளது.



- ராய்ப்பூரின் சுவாமி விவேகானந்தா விமான நிலையத்திற்கு அடுத்து உதய்ப்பூர், அமிர்தசரஸ் மற்றும் டேஹ்ராடுன் விமான நிலையங்கள் உள்ளன.
- வாடிக்கையாளர் மனநிறைவு என்பது இந்தியாவின் விமானநிலைய ஆணையத்தின் (AAI – Airports Authority of India) முக்கிய செயல்திறன் நோக்கங்களில் ஒன்றாகும். இந்தக் கணக்கெடுப்பானது போக்குவரத்து, வாகனத்தை நிறுத்துதல், பயணிகளுக்கான வசதிகள் மற்றும் தூய்மை போன்ற பரந்த அளவிலான அளவுருக்களைக் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது.

### *ராய்ப்பூரின் சுவாமி விவேகானந்தா விமான நிலையம்*

- ராய்ப்பூர் மற்றும் நயா ராய்ப்பூருக்கிடையே உள்ள மானாவில் ராய்ப்பூர் சுவாமி விவேகானந்தா விமான நிலையம் அமைந்துள்ளது. இந்த விமான நிலையம் சத்தீஷ்கரின் முதன்மையான விமான நிலையம் ஆகும்.
- முன்னதாக இவ்விமான நிலையம் ராய்ப்பூர் விமான நிலையம் என்று அழைக்கப்பட்டது. இந்த விமான நிலையம் பயணிகள் போக்குவரத்தில் 28-வது பரபரப்பான விமான நிலையமாகவும், சரக்குப் போக்குவரத்தில் 31-வது பரபரப்பான விமான நிலையமாகவும் உள்ளது.
- பிரபலமான துறவியான சுவாமி விவேகானந்தா, தனது இளம் வயதில் ராய்ப்பூரில் இரண்டு (2) ஆண்டுகள் தங்கியிருந்தார். அவரை கௌரவிக்கும் விதமாக இவ்விமான நிலையத்திற்கு 2012 ஆம் ஆண்டு ஜனவரி 24 அன்று சுவாமி விவேகானந்தா விமான நிலையம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

- - - - - - - - - - - - - - -